**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.73/2021**

**வழக்கு சாட்சி.அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகதீசன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சிவானந்தம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.12.2024**

முதல் விசாரணை

நான் தமிழக அரசிற்கு ஆடிட்டராக பணிபுரிந்து, தற்போது ஓய்வு பெற்று, சித்தோட்டில் குடியிருந்து வருகிறேன்.

கடந்த 15.10.2019-ம் தேதி அன்று எனது அண்ணன் மகன் புகழேந்திக்கு உடல் நிலை சரியில்லாமல், ஈரோடு சுதா மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதனால் அவரை பார்க்க நான், எனது மனைவி விஜயலெட்சுமி, எனது மருமகள் வனிதாதேவி ஆகியோர் வீட்டை பூட்டிவிட்டு, மருத்துவமனை வந்தோம். நாங்கள் காலை 10.00 – 10.45 அளவில் புறப்பட்டு, வீட்டிற்கு 01.15 – 01.30 மணியளவில் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். பூட்டியிருந்த கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டு இருந்தன. வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, பீரோ திறக்கப்பட்டு, பொருட்கள் சிதறி கிடந்தன. பீரோவில் வைக்கப்பட்டிருந்த 8 வளையல்கள், 3 செயின்கள், 2 நெக்லஸ்கள், காதணிகள் 4 ஜோடி, 4 மோதிரம் என மொத்தம் 19 சவரன் தங்க

நகைகள் களவு போயிருந்தன. நான் உடனடியாக காவல் நிலையம் சென்று, புகார் அளித்தேன். நீதிமன்றத்தில் தற்போது காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு அ.சா.**ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் நடந்து 1 வருடத்திற்கு பின்னிட்டு, நகை கிடைத்து விட்டதாக காவல் நிலையத்திலிருந்து அழைத்து தகவல் தெரிவித்தார்கள், நாங்கள் எங்கள் நகை தான் என்று உறுதி செய்த பின்னிட்டு, நகைகளை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

புகாரை யார் எழுதினார்கள் என்றால், நான் தான் எழுதினேன். போலீசார் சொல்ல சொல்ல நீங்கள் எழுதினீர்கள் என்றால், சரிதான். புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ, திருடு போனதாக சொல்லப்படும் ஒவ்வொரு நகையின் விபரத்தையும், அதன் எடையோடு நீங்கள் தனித் தனியே பிரித்து கூறவில்லை என்றால், சரிதான். அந்த நகைகள் அனைத்தும் உங்களுக்கு உரித்தானது என்பதை நிரூபணம் செய்யும் வகையில், எந்தவொரு ஆவணத்தையும், நீங்கள் காவல் நிலையத்தில் சமர்ப்பிக்க வில்லை என்றால், சரிதான். சம்பவம் நடந்து எத்தனை நாட்களுக்கு பின்னிட்டு புகார் அளித்தீர்கள் என்றால், சம்பவ தினத்தன்றே புகார் கொடுத்தேன். நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. புகார் அளித்த அன்று மட்டும் தான் போலீசார் உங்களை விசாரித்தார்கள் என்றால், சரிதான்.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.73/2021**

**வழக்கு சாட்சி.அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமேஸ்வரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நாராயணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.12.2024**

முதல் விசாரணை

நான் ஆவின் நிறுவனத்தில் பணிபுரிந்துவிட்டு, தற்போது ஓய்வு பெற்று, சித்தோட்டில் குடியிருந்து வருகிறேன்.

கடந்த 15.10.2019-ம் தேதி அன்று நான் பணிக்கு சென்று விட்டேன். திரும்பி வந்தபோது, உதவி ஆய்வாளர் அவர்கள், வரைபடம் வரைந்து ஜெகதீசன் வீட்டிற்கு அருகே என்னை விசாரித்தார். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரர் ஜெகதீசன் உங்கள் நண்பர் என்றால், சரிதான். அவர் புகார் அளிக்க காவல் நிலையம் சென்றபோது, நீங்களும் உடன் சென்றீர்கள் என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக கூறி காவல் நிலையத்தில் வைத்து, உங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால், சரிதான். நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யாமல், நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.